செய்தி வெளியீடு எண்:591 நாள்:14.12.2016

**செய்தி வெளியீடு**

கச்சத்தீவில் அமைந்திருக்கும் புனித அந்தோணியார் ஆலயம், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்களின் முக்கிய பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகும். தமிழ்நாட்டிலிருந்து இவ்வாலயத்திற்கு மீனவர்கள் தொன்றுதொட்டு, ஆண்டுதோறும் புனிதயாத்திரை மேற்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் இலங்கை அரசு கச்சத்தீவில் அமைந்துள்ள புனித அந்தோணியார் ஆலயத்தினை இடித்து விட்டு, புதிதாக ஒரு ஆலயம் நிர்மாணிக்கப்பட உள்ளதாக ஊடகங்களில் வெளியான தகவலைத் தொடர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கடந்த 14.5.2016 அன்று மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் மற்றும் 14.6.2016 அன்று அவர்களிடம் அளிக்கப்பட்ட கோரிக்கை மனு ஆகியவற்றில், கச்சத்தீவில் ஏற்கெனவே இருக்கும் புனித அந்தோணியார் தேவாலயத்தினை இடித்துவிட்டு, புதிதாக தேவாலயம் கட்ட இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவது, கச்சத்தீவு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இலங்கை கடற்படையினரின் எண்ணிக்கை அதிகரிப்பது, போன்ற இலங்கை அரசின் அணுகுமுறைகள் மூலம் கச்சத்தீவு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் பல நூற்றாண்டுகளாக தமிழக மீனவர்கள் அனுபவித்து வந்த பாரம்பரிய உரிமைகளை பறிப்பது மற்றும் கட்டுப்படுத்துவதற்கான இலங்கை அரசின் கொள்கையாகவே தமிழக மீனவர்களால் பார்க்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களுக்கு சுட்டிக்காட்டினார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இலங்கை அரசு ஏற்கெனவே இருந்த ஆலயத்தினை அவ்வாறே விட்டுவிட்டு, புதிதாக ஒரு ஆலயத்தினை நிர்மாணித்து அதனை அர்ச்சிப்பு செய்யும் விழாவினை கடந்த 7.12.2016 அன்று நடத்த உத்தேசித்தது. இதுகுறித்து, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் 1.12.2016 நாளிட்ட கடிதம் மூலம் இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் அவர்களின் நேரிடை கவனத்திற்கு கொண்டு சென்றதோடு, தமிழக மீனவர்கள் மேற்படி ஆலய அர்ச்சிப்பு செய்யும் விழாவில் கலந்து கொள்வதற்கு மத்திய அரசு வழக்கமாக வழங்கும் தடையில்லா சான்று வழங்க வேண்டும் என்று கோரினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திடீர் மறைவினையொட்டி கச்சத்தீவில் அமைந்த புதிய ஆலயத்தினை அர்ச்சிப்பு செய்யும் விழா நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் தனது 8.12.2016 தேதியிட்ட கடிதத்தில், கச்சத்தீவில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஆலய அர்ச்சிப்பு செய்யும் விழாவில் கலந்து கொள்ள, தமிழக மீனவ யாத்திரீகர்களின் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடுமின்றி மத்திய அரசு தடையில்லா சான்று வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். இவ்வாறு கச்சத்தீவில் தமிழ் நாடு மீனவர்களுக்கு உரிய பாரம்பரிய உரிமையை நிலைநாட்டுவற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மேற்கொண்ட இடையறாத முயற்சிகளின் பயனாக 23.12.2016 அன்று நடைபெறவுள்ள புதிய ஆலய அர்ச்சிப்பு செய்யும் விழாவில் தமிழ்நாட்டைச் சார்ந்த 100 மீனவ யாத்திரீகர்கள் கலந்து

கொள்ள மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.  இதனை தொடர்ந்து தமிழ்நாடு அரசு கச்சத்தீவு ஆலய அர்ச்சிப்பு செய்யும் விழாவில் மீனவ யாத்திரீகர்கள் கலந்து கொள்ள தேவையான ஏற்பாடுகளை செய்யும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**